# சத்தியமங்கலம் நகராட்சி

2022-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30.08.2022-ஆம் தேதி செவ்வாய் கிழமை மாலை 4.00 மணிக்கு நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தின் நடவடிக்கைகள்.

**பொருள் : 1**

சத்தியமங்கலம் நகராட்சி ஆணையாளர் திரு.மெ.சரவணகுமார் அவர்களின் ஆகஸ்டு 2022 ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(கட்டு எண்.528/2022/சி1)

**தீர்மானம் எண் : 146** பதிவு செய்யப்பட்டது நாள் 30.08.2022

**தீர்மானம் எண் : 147 அங்கீகரிக்கப்பட்டது நாள் 30.08.2022**

**பொருள் : 2**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட கோட்டு வீராம்பாளையம் திருவள்ளுவர் திடலில் அமைந்துள்ள ஆடுவதை சாலையில் சுங்க கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு திரு.T.ஏசுதாசன் சிவக்குமார் என்பவர் 23.07.2019 முதல் 22.07.2022 வரை உள்ள மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் இவர் தொடர்ந்து சுங்கம் வசூல் உரிமையினை வைத்துக் கொள்ள முன்வராத பட்சத்தில் 12.08.2022 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் திரு.சீ.நரேஸ்குமார் என்பவர் ஓராண்டிற்கு ரூ.35,000/- க்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வழங்கியுள்ளார் என்பதை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

இவ்வினம் பழைய ஏலத்தொகையைவிட குறைவாக உள்ளதாலும், மேலும் இவ்வினத்திற்கு ஒருவரும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர முன்வராத பட்சத்தில் உரிமக்காலம் 22.07.2022 உடன் காலவதியாவதாலும், நகராட்சியின் நிதியிழப்பினை கருத்தில் கொண்டு திரு.சீ.நரேஸ்குமார், த/பெ.சீனிவாசன், கோட்டுவீராம்பாளையம், சத்தியமங்கலம் என்பவருக்கு ரூ.35,000/- க்கு அரசாணை எண். 181 ன்படியும் மற்றும் பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு 23.07.2022 முதல் மூன்றாண்டு காலத்திற்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்படைப்பு செய்தமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1795/2022/அ3)

**தீர்மானம் எண் : 147 அங்கீகரிக்கப்பட்டது நாள் 30.08.2022**

**பொருள் : 3**

சத்தியமங்கலம் நகராட்சியில் புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கடை எண். 66 க்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 64 முறை கோரப்பட்டும் ஒருவரும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள வில்லை. இந்நிலையில் 65 வது முறையாக 10.08.2022 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பொது ஏலத்திற்கு ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. இந்நிலையில் ஒப்பந்தப்புள்ளியில் கடை எண்.66 க்கு திருமதி.பி.செல்வி, க/பெ.எஸ்.என்.பொன்னுசாமி, 86 வெங்கடாஜலம் பிள்ளை பெரிய வீதி, சத்தியமங்கலம் என்பவர் ரூ.7,200/- உயர்ந்த பட்ச மாத வாடகையாக ஜி.எஸ்.டி நீங்கலாக கோரியுள்ளதை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

புதிய பேருந்து நிலைய கடை எண். 66 க்கு கடந்த 64 முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒருவரும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொள்ள முன்வராதப் பட்சத்தில் 10.08.2022 அன்று வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியானது பழைய வாடகை விட குறைவாகவும் பொதுப்பணித்துறை மதிப்பீட்டை விட கூடுதலாகவும் உள்ளதால் மாத வாடகை ரூ.7,200/- மற்றும் அதற்கான ஜி.எஸ்.டி 18% சதவிகிதம் ரூ.1,296/- ஆக மொத்தம் ரூ.8,496/- க்கு திருமதி. பி.செல்வி, சத்தியமங்கலம் என்பவருக்கு 01.09.2022 முதல் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு மேற்படி கடையை ஒப்படைப்பு செய்ய பொது ஏல நிபந்தனைகள் மற்றும் அரசாணை எண். 92 ன்படி உள்ள அனைத்து சரத்திற்கு உட்படுத்தி ஒப்படைப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க. எண். 1793/2022/அ3)

**தீர்மானம் எண் : 148 அங்கீகரிக்கப்பட்டது நாள் 30.08.2022**

பொருள் : 4

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட கச்சேரி வீதி சத்திரக்கடை எண்-11 க்கு 30.06.2022-ஆம் தேதியுடன் உரிமம் காலம் முடிவடைவதால் அரசாணை எண். (நிலை) 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.4) துறை நாள்.03.07.2007 ன்படி மேலும் உரிமம் நீடித்து கொள்வது குறித்து விருப்ப படிவம் பெறப்பட்டது. அதன்படி உரிமக்கட்டணம் மற்றும் 12 மாத வாடகை வித்தியாச முன்வைப்புத் தொகைகள் பெறப்பட்டதை தொடர்ந்து பொது ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு மேலும் 01.07.2022 ஆம் தேதிகளிலிருந்து மூன்றாண்டு முடிய அதே உரிமைதாரருக்கு நீடிப்பு செய்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | இனம் | கடை எண் | விதிப்பு எண் | கடை ஏல உரிமதாரர் பெயர் | பழைய மாத வாடகை | 15% உயர்வு செய்த பின் மாத வாடகை | நீடிப்பு செய்து வழங்கும் வாடகை காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கச்சேரி வீதி சத்திரக்கடை | 11 | 061/BD01/00041 | எஸ்.விஸ்வநாதன் | 8500/- | 9775/- | 01.07.2022 முதல் 30.06.2025 இரண்டாவது தவணை |

<u>அலுவலகக்குறிப்பு :</u>

மேற்காணும் கச்சேரி வீதி சத்திரக்கடை - 11 - 30.06.2022-ஆம் தேதியுடன் உரிமம் காலம் முடிவடைவதையொட்டி, மேலும் அரசாணை எண்.92-ன் படி உரிய உரிமக்கட்டணம் மற்றும் 12 மாத வாடகை வித்தியாச முன் வைப்புத் தொகைகள் பெறப்பட்டது. எனவே மேற்கண்ட கடைகளுக்கு அரசாணை எண். 92-ன்படி நிபந்தனைகளுக்குட்பட்டு மேலும் மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் நீடிப்பு செய்து மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1503/2022/அ3)

**தீர்மானம் எண் : 149 அங்கீகரிக்கப்பட்டது நாள் 30.08.2022**

பொருள் : 5

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய கடைஎண்-51, 31.05.2022-ஆம் தேதியுடன் உரிமம் காலம் முடிவடைவதால் அரசாணை எண்.(நிலை) 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.4) துறை நாள்.03.07.2007 ன்படி மேலும் உரிமம் நீடித்து கொள்வது குறித்து விருப்ப படிவம் பெறப்பட்டது. அதன்படி உரிமக்கட்டணம் மற்றும் 12 மாத வாடகை வித்தியாச முன்வைப்புத் தொகைகள் பெறப்பட்டதை தொடர்ந்து ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு மேலும் 01.06.2022ஆம் தேதிகளிலிருந்து மூன்றாண்டு முடிய அதே உரிமைதாரருக்கு நீடிப்பு செய்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | இனம் | கடை எண் | விதிப்பு எண் | கடை ஏல உரிமதாரர் பெயர் | பழைய மாத வாடகை | 15% உயர்வு செய்த பின் மாத வாடகை | நீடிப்பு செய்து வழங்கும் வாடகை காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலைய கடை | 51 | 061/4060 | தலைவர் புன்செய் புளியம்பட்டி கூட்டுறவு பண்டக சாலை லிட் | 3450/- | 3968/- | 01.06.2022 முதல் 31.05.2025 மூன்றாவது தவணை |

<u>அலுவலகக்குறிப்பு :</u>

1. மேற்காணும் புதிய பேருந்து நிலையக் கடை -51, 31.05.2022-ஆம் தேதியுடன் உரிமம் காலம் முடிவடைவதையொட்டி, மேலும் அரசாணை எண்.92-ன்படி உரிய உரிமக்கட்டணம் மற்றும் 12 மாத வாடகை வித்தியாச முன் வைப்புத் தொகைகள் பெறப்பட்டது. எனவே மேற்கண்ட கடைக்கு அரசாணை எண். 92-ன் படி ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு மேலும் மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் நீடிப்பு செய்து மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1541/2022/அ3)

**தீர்மானம் எண் : 150 அங்கீகரிக்கப்பட்டது நாள் 30.08.2022**

பொருள் : 6

சத்தியமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான சத்திரக் கடை எண் 9-A-ஐ திருமதி.வினோபா. என்பவருக்கு 01.07.2019 முதல் 31.08.2022 வரை உண்டான காலத்திற்கு மாத வாடகை ரூ.23,000/-க்கு உரிம ஆணை வழங்கப்பட்டது. தற்போது அவரின் கடை அரசாணை எண் 92-ன்படி உரிமம் காலம் 31.08.2022 யுடன் முடிவடைவதால் மேலும் அரசு ஆணைப்படி நீட்டித்து கொள்ள சம்மத கடிதம் கோரப்பட்டது. ஏல உரிமைதாரர் நீட்டித்துக் கொள்ள விருப்பம் இல்லை என 16.08.2022 தேதியில் கடிதம் வழங்கியுள்ளார். எனவே கச்சேரி வீதி சத்திரக் கடை எண்-9-A உரிமம் ரத்து செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

இந்நகராட்சிக்கு சொந்தமான கச்சேரி வீதி சத்திரக்கடைஎண்-9-A உரிமம் காலம் 31.08.2022 யுடன் முடிவடைவதால் மேலும் மனுதாரர் நீட்டித்துக் கொள்ள விருப்பம் இல்லை என கடிதம் வரப்பட்டது தொடர்ந்து, மேற்கண்ட சத்திர கடை எண்-9-A திருமதி.எஸ்.வினோபா உரிமம் ரத்து செய்து பொது ஏல நிபந்தனைகள் மற்றும் அரசாணை எண் 92-ன் படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கைகள் கோர மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1545/2022/அ3

**தீர்மானம் எண் : 151 அங்கீகரிக்கப்பட்டது நாள் 30.08.2022**

பொருள் : 7

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.11135/2022/எம்3 நாள்.06.05.2022 இன்படி சத்தியமங்கலம் நகராட்சிக்கு நகர்மன்ற தலைவர் அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக ஒரு ஸ்கார்பியோ ஈப்பு வாகனம் பொது நிதியில் வாங்கி கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. அந்த உத்திரவில் ஸ்கார்பியோ ஈப்பு வாகனம் GeM Rate அடிப்படையில் வாங்கப்பட வேண்டும். மேலும், சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளது. 1) ஸ்கார்பியோ ஈப்பு வாகனம் ஜெம் போர்ட்டலில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி சாதாரண மாடல் வாகனம் கூடுதல் பொருத்திகள் (Extra Fittings) எதுவுமின்றி கொள்முதல் செய்யப்பட வேண்டும். 2) ஈப்பு வாகனத்திற்கான செலவினம் முழுவதும் பொது நிதியிலிருந்து மட்டுமே மேற்கொள்ளப்படுதல் வேண்டும். 3) ஈப்பு வாகனம் வாங்கப்பட்டவுடன் அதனை உரிய விதிமுறைகளைப் பின்பற்றி வாகனத்தினை காப்பீடு செய்ய வேண்டும். 4) அனுமதிக்கப்பட்ட ஈப்பு வாகனத்தினை இயக்குவதற்கு தகுதியான ஓட்டுநர் இல்லாதபட்சத்தில் ஓட்டுநர் ஒப்பந்த அடிப்படையில் உரிய ஒப்பந்த விதிமுறைகளை பின்பற்றி நிரப்பப்பட வேண்டும். மேல் குறிப்பிட்ட விதிமுறைகள் கண்டிப்பாக கடைபிடிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளதை தொடர்ந்து, இந்நகராட்சிக்கு கடந்த 04.08.2022 அன்று ஸ்கார்பியோ ஈப்பு வாகனம் MODEL No.S11 MH 2W 140 வாங்கப்பட்டுள்ளது. ஈப்பு வாகனத்தில் Extra Fittings,Insurance,Road Tax மற்றும் வட்டார போக்குவரத்து துறைக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் இதர செலவினங்கள் சேர்த்து உத்தேச செலவின தொகை ரூ.5.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்.
3) இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்ற செலவுகள் மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(கட்டு எண்.579/2022/இ1)

**தீர்மானம் எண் : 152 அனுமதிக்கப்பட்டது நாள் 30.08.2022**

பொருள் : 8

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்குட்பட்ட ரங்கசமுத்திரம் ஆரம்பப்பள்ளி கட்டிடம் கட்டி பல வருடங்களுக்கு மேலாகி விட்டது. தற்போது மழை காலம் என்பதால் மேற்கூரையில் மழை நீர் தேங்கி நின்று வகுப்பு அறையில் கசிந்து வருவதாகவும், மேலும், கட்டிடத்தில் சுவர் விரிசல் ஏற்பட்டு சுவரின் மேல் பூச்சு விழுந்து வருவதாகவும், பள்ளி மாணவாகளுக்கு மின் விசிறி மற்றும் மின் ஒயரிங் மற்றும் இதர அடிப்படை வசதிகள் செய்து தரக்கோரி தலைமை ஆசிரியர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். இப்பள்ளி மாணவர் மற்றும் மாணவியர் அவர்களின் நலன் கருதியும், நகராட்சி பள்ளி கட்டிடம் சரியான முறையில் பராமரிக்கவும் அவசர அவசியம் கருதியும் ரங்கசமுத்திரம் நகராட்சி ஆரம்பபள்ளி கட்டிடம் சிறப்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் **ரூ.4.00 இலட்சம் ஆகும்.** இச்செலவினம் நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்
2)இச்செலவினம் நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம். (கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 153 அனுமதிக்கப்பட்டது நாள் 30.08.2022**

**பொருள் : 9**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்குட்பட்ட ரங்கசமுத்திரம் உயர் நிலைப்பள்ளி கட்டிடம் கட்டி பல வருடங்களுக்கு மேலாகி விட்டது. தற்போது மழை காலம் என்பதால் மேற்கூரையில் மழை நீர் தேங்கி நின்று வகுப்பு அறையில் கசிந்து வருவதாகவும், மேலும், கட்டிடத்தில் சுவர் விரிசல் ஏற்பட்டு சுவரின் மேல் பூச்சு விழுந்து வருவதாகவும், பள்ளி மாணவாகளுக்கு மின் விசிறி மற்றும் மின ஒயரிங் மற்றும் இதர அடிப்படை வசதிகள் செய்து தரக்கோரி தலைமை ஆசிரியர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். இப்பள்ளி மாணவர் மற்றும் மாணவியர் அவர்களின் நலன் கருதியும், நகராட்சி பள்ளி கட்டிடம் சரியான முறையில் பராமரிக்கவும் அவசர அவசியம் கருதியும் ரங்கசமுத்திரம் நகராட்சி உயர்நிலைப்பள்ளி கட்டிடம் சிறப்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் **ரூ.5.00 இலட்சம் ஆகும்.** இச்செலவினம் நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
1)மன்றம் அனுமதிக்கலாம்
2)இச்செலவினம் நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம் (கட்டு எண்.548/2022/இ1)

**தீர்மானம் எண் : 154 அனுமதிக்கப்பட்டது நாள் 30.08.2022**

**பொருள் : 10**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்குட்பட்ட ஆர்.எம்.பி.நகர், கொளத்துார், ரங்கசமுத்திரம் உயர்நிலை மற்றும் ஆரம்பபள்ளி ஆகிய நகராட்சி பள்ளியில் பள்ளி மாணவர் மற்றும் மாணவிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் இயந்திரத்தின் (RO) மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வந்துள்ளன. இந்த இயந்திரம் பழுது ஏற்பட்டு நீண்ட நாட்கள் பள்ளி மாணவர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட உள்ளதாக சத்துணவு அமைப்பாளர் அவர்களின் விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார்கள். இப்பொருள் மீது சிறப்பினமாக கருதியும் அவசர அவசியத்தினை கருதியும் பள்ளி மாணவர்களின் நலன் கருதியும் மேற்கண்ட நான்கு பள்ளியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இயந்திரத்தின் (RO) பழுது சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
1)மன்றம் அனுமதிக்கலாம்
2)இச்செலவினம் நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
(கட்டு எண்.1465/2022/இ1)

**தீர்மானம் எண் : 155 அனுமதிக்கப்பட்டது நாள் 30.08.2022**

**பொருள் : 11**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்குட்பட்ட சத்தி -1 நகராட்சி நடுநிலைப்பள்ளியில் பள்ளி மாணவர்களுக்கு புரட்சிதலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் கீழ் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. உணவு தயாரிக்கும் பணிக்கு உணவு பொருட்கள் வைப்பு அறை அடைக்கப்பட்டுள்ளதாகவும், ரங்கசமுத்திரம் உயர் நிலைப்பள்ளியில் இருந்து தினமும் உணவு தயாரிக்கும் பொருட்கள் கொண்டு வந்து சமையல் வேலை செய்து பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. எனவும், தினமும் இப்பணி செய்வதால் மிகவும் சிரமமாக உள்ளது என்று சத்துணவு அமைப்பாளர் அவர்களின் விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார்கள். இப்பொருள் மீது சிறப்பினமாக கருதி புதிதாக பொருள் வைக்கும் அறை (Store Room) கட்ட உத்தேச செலவினம் **ரூ.5.00 இலட்சம்** ஆகும். இச்செலவினம் நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்
2)இச்செலவினம் நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
(கட்டு எண்.1465/2022/இ1)

**தீர்மானம் எண் : 156 அனுமதிக்கப்பட்டது நாள் 30.08.2022**

பொருள் : 12

சத்தியமங்கலம் நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் எண்.TN 36AX 0783 வாகனத்தில் உள்ள குளிர் சாதன பெட்டி (Air Conditioner) பழுது ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்கள். மேலும், ஈப்பு வாகத்தின் முகப்பு கண்ணாடி விரிசல் ஏற்பட்டு இரவு நேரங்களில் வாகனம் ஒட்ட முடியாமல் உள்ளதாக தெரிவித்துள்ளார்கள். மேலும், மேற்கண்ட இரண்டு பழுதுகள் சரி செய்து தருமாறு ஈப்பு வாகன ஒட்டுநர் அவர்களின் விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார்கள். எனவே, இப்பொருள் மீது சிறப்பு கவனம் செலுத்தும் பொருட்டு பழுதுகள் சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.0.40 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்,
3) இந்நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(கட்டு எண்.1848/2022/இ1)

**தீர்மானம் எண் : 157 அனுமதிக்கப்பட்டது நாள் 30.08.2022**

பொருள் : 13

சத்தியமங்கலம் நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் குடிநீர் டேங்கர் லாரி வாகனம் எண்.TN 36AZ 8821 வாகனத்திற்கு செப்டம்பர் மாதம் தகுதி சான்று முடிவடைவதால் மீண்டும் தகுதி சான்று பெற வேண்டி வாகனம் Mechanic, Electrical, Painting போன்ற வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஆர்.சந்திரன், குடிநீர் டேங்கர் லாரி வாகன ஒட்டுநர் தனது விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார்கள். எனவே, இப்பொருள் மீது சிறப்பு கவனம் செலுத்தும் பொருட்டு பழுது பார்க்க அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பழுதுகள் சரி செய்யவும், சிறப்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், வட்டார போக்குவரத்து துறைக்கு செலுத்தப்பட வேண்டிய தொகையினையும் சேர்த்து உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2) இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
3) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(கட்டு எண்.1688/2022/இ1)

**தீர்மானம் எண் : 158 அனுமதிக்கப்பட்டது நாள் 30.08.2022**

பொருள் : 14

சத்தியமங்கலம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் 2.0 ன்படி 2022-2023-ம் ஆண்டிற்கான 20 எண்ணிக்கையிலான தனிநபர் வீட்டுக்கழிப்பிடம் கட்டிக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான மத்திய அரசு நிதி நபர் ஒன்றுக்கு ரூ.4000/- வீதம் 20 நபர்களுக்கு தொகை ரூ.80,000/- மாநில அரசு நிதி நபர் ஒன்றுக்கு ரூ.2667/- வீதம் 20 நபர்களுக்கு தொகை ரூ.53,340/- நகராட்சி நிதி நபர் ஒன்றுக்கு ரூ.2667/- வீதம் 20 நபர்களுக்கு தொகை ரூ.53,340/- மொத்தம் ரூ.1,86,680/- ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து பயன்படுத்தவும் நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு : -**

1.20 தகுதி வாய்ந்த பயனாளிகளை தேர்வு செய்து தனி நபர் வீட்டுக் கழிப்பிடம் கட்ட உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.
2.நகர் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந. க. எண். 1051/2021/எச்.1)

**தீர்மானம் எண் : 159 அனுமதிக்கப்பட்டது நாள் 30.08.2022**

பொருள் : 15

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை- 28 அவர்களின் கடிதம் எண். 28369/ஜே3 நாள்.04.12.2018 இன் படி சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண். 1,2,17 முதல் வார்டுகள் 22 வரையுள்ள பகுதிகளில் 01.04.2020 முதல் 31.03.2021 வரை (Outsourcing) தனியார் வசம் பணி ஒப்படைப்பு செய்து 50 ஒப்பந்த பணியாளர்கள் தற்போது வி.பி.என்.பில்டர்ஸ் என்னும் தனியார் நிறுவனத்திற்கு தொடர்ந்து ஒரு மாத காலம் என்ற அடிப்படையில் 01.04.2021 முதல் 31.08.2022 வரை பணி நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதிக்காலம் முடிவடையும் நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி பெறப்பட கருத்துரு நகராட்சிகள் நிர்வாக இயக்குநரகம் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

மேற்காணும் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள 50 ஒப்பந்த பணியாளர்களின் வெளிமுகமை நிறுவனத்தின் ஒப்பந்தக்காலத்தினை 01.9.2022 முதல் 30.11.2022 வரையிலான மூன்று மாத காலத்திற்கு பொது சுகாதார பணியின் அவசியம் கருதி தனியார் நிறுவனமான வி.பி.என். பில்டர்ஸ், திருப்பூர் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் சம்பள விகிதத்தில் 01.09.2022 முதல் 30.11.2022 வரையிலான மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்தக்காலத்தினை நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும். அதற்கான உத்தேச செலவினம ரூ.23,60,000/- க்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. பொது சுகாதாரப்பணியின் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தினை திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. மூன்று மாதம் நீட்டிப்பு அல்லது நகராட்சி நிர்வாக இயக்குநர், திருப்பூர் அவர்களின் திருத்திய உத்திரவு வரும் வரையில்.

(ந.க.எண்.137/2020/எச்1)

**தீர்மானம் எண் : 160 அனுமதிக்கப்பட்டது நாள் 30.08.2022**

பொருள் : 16

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட அரசு மற்றும் நகராட்சி பராமரிப்பிலுள்ள பள்ளியில் உள்ள கழிப்பறைகளை பராமரிப்பு செய்திட தனியார் ஒப்பந்தம் மூலம் பணியாளர்களை நியமிக்க அரசாணை எண். G.O.(MS) No. 166 நாள். 23.11.2016 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை) இன்படி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி சத்தியமங்கலம் நகராட்சியில் கீழ்க்காணும் விபரப்படி பள்ளிகள் உள்ளன.

| வ.எண் | பள்ளி விபரம் | பணியாளர் |
|---|---|---|
| 1 | நகராட்சி ஆரம்ப பள்ளி, ரங்கசமுத்திரம் | 2 |
| 2 | நகராட்சி உயர்நிலைப்பள்ளி, ரங்கசமுத்திரம் | 3 |
| 3 | நகராட்சி ஆரம்ப பள்ளி, ஆர். எம்.பி. நகர் | 2 |
| 4 | நகராட்சி நடுநிலைப் பள்ளி, சத்தியமங்கலம் | 3 |
| 5 | நகராட்சி துவக்கப்பள்ளி, கொளத்தூர் | 2 |
| 6 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி | 4 |
| | **மொத்தம்** | **16** |

இவ்வலுவலக ந.க.எண். 650/2019/எச்.1 நாள். 30.06.2019 இன்படி 01.07.2019 முதல் 30.06.2020 வரையிலான காலத்திற்கு வெளிக்கொணர்வு முறையில் பள்ளிக்கழிப்பறைகள் துாய்மையாக பராமரித்தல் பணியினை மேற்கொள்ள உத்திரவிடப்பட்டு தற்பொது 30.06.2020 உடன் மேற்படி பணியின் காலம் நிறைவு பெறுவதால், மீண்டும் 01.07.2020 முதல் 30.06.2021 வரையில் ஓராண்டு காலத்திற்கு மேற்காணும் 6 பள்ளிகளுக்கு 16 பணியாளர்கள் நிபந்தனைகளுக்குட்பட்டு தற்காலிகமான முறையில் பணி பார்க்கப்பட்டு பழைய ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்கப்பட்டு வந்தனர்.

மேலும் கொரோனா கட்டுப்பாடுகள் அமலில் இருந்ததால் 01.07.2021 வரை பள்ளிகள் திறக்கப்படவில்லை. எனவே பள்ளி துாய்மை பணி செய்யும் பணியாளர்கள் (School Toilet) பணி உத்திரவு தற்காலியமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

தற்போது மீண்டும் கொரோனா கட்டுப்பாட்டு தளர்வுகள் செய்யப்பட்டதின் கீழ் பள்ளிகள் திறக்கப்பட்டதின் பொருட்டு 16 ஒப்பந்த பணியாளர்களுக்கான ஒப்பந்தக்காலத்தினை 01.05.2022 முதல் 31.08.2022 வரை நான்கு மாதகாலத்திற்கு நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளப்பட்டது. எனவே மேலும் 01.09.2022 முதல் 30.11.2022 வரை மூன்று மாதகாலத்திற்கு ஏற்கனவே தூய்மை பணிகளை மேற்கொண்டு வந்த V.B.N. பில்டர்ஸ், திருப்பூர் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் சம்பள விகிதத்தில் 01.09.2022 முதல் 30.11.2022 வரையிலான மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்தக்காலத்தினை நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.7,55,000/-க்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு : -**

1. பள்ளி மாணவ மாணவியரின் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தினை பள்ளிக்கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.541/2020/எச்1)

**தீர்மானம் எண் : 161 அனுமதிக்கப்பட்டது நாள் 30.08.2022**

பொருள் : 17

சத்தியமங்கலம் நகராட்சியில் அனைத்து பகுதிகளிலும் உள்ள தெரு நாய்களை கண்டறிந்து பிடித்து அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனம் (NGO) மூலம் கருத்தடை அறுவை சிகிச்சை செய்திடவும் மற்றும் ரேபிஸ் நோய் தடுப்பூசி (ARV) செலுத்த நாய் ஒன்றுக்கு ரூ.445/- வீதம் மொத்தம் 400 நாய்களுக்கு உத்தேச செலவினம் ரூ.1,80,000/- க்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்பப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1.நகர்மன்ற அனுமதிக்கலாம்.
2.பொது சுகாதார நலன் கருதி நகர்மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண்.580/2022/எச்.1)

**தீர்மானம் எண் : 162 அனுமதிக்கப்பட்டது நாள் 30.08.2022**

பொருள் : 18

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை -28 அவர்களின் கடிதம் எண். 28369/ஜே 3 நாள்.04.12.2018 சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண். 11,12,23 முதல் வார்டுகள் 27 வரையுள்ள பகுதிகளில் 01.04.2020 முதல் 31.03.2021 வரை (Outsourcing) தனியார் வசம் பணி நீட்டிப்பு செய்து 55 ஒப்பந்த பணியாளாகள் மூலம் துாய்மைப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வந்தனர். தற்போது வி.பி.என்.பில்டர்ஸ் என்னும் தனியார் நிறுவனத்திற்கு தொடர்ந்து ஒரு மாத காலம் என்ற முறையில ˙01.04.2021 முதல் 31.08.2022 வரை பணி நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதிக்காலம் முடிவடைந்த நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெறப்பட கருத்துரு நகராட்சிகள் நிர்வாக இயக்குநரகம் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

மேற்காணும் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள 55 ஒப்பந்த பணியாளர்களின் வெளிமுகமை நிறுவனத்தின் ஒப்பந்தக்காலத்தினை 01.9.2022 முதல் 30.11.2022 வரையிலான மூன்று மாத காலத்திற்கு பொது சுகாதார பணியின் அவசியம் கருதி தனியார் நிறுவனமான வி.பி.என். பில்டர்ஸ், திருப்பூர் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் சம்பள விகிதத்தில் 01.09.2022 முதல் 30.11.2022 வரையிலான மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்தக்காலத்தினை நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும். அதற்கான உத்தேச செலவினம் ரூ.25,95,000/- க்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. பொது சுகாதாரப்பணியின் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தினை திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. மூன்று மாதம் நீட்டிப்பு அல்லது நகராட்சி நிர்வாக இயக்குநர் திருப்பூர் அவர்களின் திருத்திய உத்திரவு வரும் வரையில்.

( ந.க.எண். 1305/2019/எச்.1)

**தீர்மானம் எண் : 163 அனுமதிக்கப்பட்டது நாள் 30.08.2022**

பொருள் : 19

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை - 28 அவர்களின் செயல்முறை ஆணை Roc.No.19008/SBM-(U) 2.0/2022 நாள். 18.07.2022 ல் தூய்மை இந்தியா திட்டம் 2.0 திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு ஏற்படுத்த IEC பணிகளுக்கு சத்தியமங்கலம் நகராட்சிக்கு 2021-2022 மற்றும் 2022-2023 ம் ஆண்டிற்கு மத்திய அரசின் பங்குத் தொகை (30%) ரூ.2,27,236/- ம் தமிழ்நாடு அரசின் பங்குத் தொகை ( 40%) ரூ.5,04,968/- ம் மொத்தம் ரூ.7,32,204/- ( ரூபாய் ஏழு லட்சத்து முப்பத்து இரண்டாயிரத்து இருநூற்று நான்கு மட்டும்) நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண். 2988/2015/எச்.1)

**தீர்மானம் எண் : 164 அனுமதிக்கப்பட்டது நாள் 30.08.2022**

பொருள் : 20

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் உருவாகும் கழிவுகளை BOV பேட்டரி வாகனம் மூலம் தரம் பிரித்து பெறப்பட்டு வருகின்றன. மேற்படி BOV வாகனங்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்து கொள்ள நகர்மன்ற தீர்மான எண். 29 நாள்.30.03.2022 ன்படி உத்தேச செலவினம் ரூ.10,00,000/- திற்கு அனுமதி பெறப்பட்டு, நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு பயன்பாட்டில் உள்ள 20 BOV பேட்டரி வாகனங்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யப்பட்டு பயன்படுத்தி வரப்பெற்றது. தற்போது உத்தேச செலவினம் முடிவுற்ற நிலையில் உள்ளதால், பொது சுகாதார நலன் கருதி பேட்டரி வாகனங்களில் ஏற்படும் பழுதுளை உடனுக்குடன் சரி செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,00,000/- த்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரிட நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலகக்குறிப்பு** : பொது சுகாதார நலன் கருதி மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந. க. எண். 568/2022/எச்.1)

**தீர்மானம் எண் : 165 அனுமதிக்கப்பட்டது நாள் 30.08.2022**

பொருள் : 21

அரசு ஆணை 92 ன்படி பொது ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி 26.08.2022 அன்று கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் (1) | கடை எண் (2) | இனம் (3) | ஏலதாரரின் பெயர் (4) | பழையமாத வாடகை (5) |
|---|---|---|---|---|
| 1 | 1 | கச்சேரி வீதி சத்திர வணிக வளாகக்கடை எண். 1 | பொது மேலாளர்,<br>ஈரோடு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை லிட்.,<br>77/70, பெருந்துறை ரோடு,<br>ஈரோடு. | 18,800/- |
| 2 | 2 | கச்சேரி வீதி சத்திர வணிக வளாகக்கடை எண். 2 | பொது மேலாளர்,<br>ஈரோடு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை லிட்.,<br>77/70, பெருந்துறை ரோடு,<br>ஈரோடு. | 8,600/- |
| 3 | 17 | கச்சேரி வீதி சத்திர வணிக வளாகக்கடை எண். 17 | ர.கருப்புசாமி,<br>த/பெ. ராமன்,<br>உதயமரத்து மேடு,<br>தனவாசி காலனி,<br>சத்தியமங்கலம். | 8,350/- |
| 4 | 18 | கச்சேரி வீதி சத்திர வணிக வளாகக்கடை எண். 18 | ர.கருப்புசாமி,<br>த/பெ. ராமன்,<br>உதயமரத்து மேடு,<br>தனவாசி காலனி,<br>சத்தியமங்கலம். | 10,500/- |
| 5 | 1 | புதிய பேருந்து நிலைய கடை எண். 1 | பொது மேலாளர்,<br>ஈரோடு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை லிட்.,<br>77/70, பெருந்துறை ரோடு,<br>ஈரோடு. | 14,680/- |

| சந்தை மார்கெட் மாத வாடைகை (6) | வழிகாட்டிமதிப்பு (PWD) மாத வாடகை (7) | குழு நிர்ணயம் மாத வாடகை (8) | உயர்ந்த பட்ச ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி மாத வாடகை (9) | உரிமை காலம் (10) | பொதுஏலம்(ம) ஒப்பந்தப்புள்ளி எத்தனைமுறை ஏலம் (11) |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3,200 | 4,620 | 6,000 | 4,700 | 01.09.2022 முதல் 30.08.2025 | 12 |
| 3,200 | 4,620 | 6,000 | 4,700 | 01.09.2022 முதல் 30.08.2025 | 12 |
| 3,200 | 4,620 | 6,000 | 7,000/- | 01.09.2022 முதல் 30.08.2025 | 3 |
| 3,200 | 4,620 | 6,000 | 6,500/- | 01.09.2022 முதல் 30.08.2025 | 23 |
| 5,570 | 7,150 | 9,000 | 7,200/- | 01.09.2022 முதல் 30.08.2025 | 16 |

அலுவலக குறிப்பு :

மேற்கண்ட கடைகள் பல முறை பொது ஏலம் (ம) ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு வாடகைக்கு ஒருவரும் எடுக்க முன்வராத பட்சத்தில் 26.08.2022 அன்று மேற்காண் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. இதில் பழைய மாத வாடகை காட்டிலும் குறைவாகவும் (ம) சந்தை மதிப்பு (PWD) வழிகாட்டி மதிப்பு குழு நிர்ணயம் மாத வாடகை காட்டிலும் அதிகமாக கேட்டுள்ளார். எனவே மேற்காண் ஏல இனங்களை 01.09.2022 முதல் நிதியிழப்பை தவிர்க்கும் பொருட்டு மேற்படி கடைகளை ஒப்படைப்பு செய்ய பொது ஏல நிபந்தனைகள் மற்றும் அரசாணை எண். 92 ன்படி உள்ள அனைத்து சரத்திற்கு உட்படுத்தி ஒப்படைப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 166 அங்கீகரிக்கப்பட்டது நாள் 30.08.2022**

பொருள் : 22

சத்தியமங்கலம் நகராட்சி 2022-2023 ஆம் ஆண்டு குடிநீர் நிதி திட்டத்தின் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு இந்நகர் மன்ற தீர்மானம் எண். 130,131 மற்றும் 138 நாள்.29.07.2022 இன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இப்பணிகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு 26.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

1) **வேலையின் பெயர்:** சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட 27 வார்டுகளில் மின் மோட்டார் மற்றும் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின் மோட்டார்கள் பழுது பார்த்தல்
மதிப்பீடு தொகை : ரூ.9,95,000/-

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | ரூ.995000/- | மதிப்பீடு தொகையினை விட 0.10 % குறைவு | ரூ.877935/- |
| 2 | Thiru.S.R.Moorthy Contractor Sathyamangalam | | மதிப்பீடு தொகையினை விட 1.38 % அதிகம் | ரூ.890935/- |

**2)வேலையின் பெயர்:** சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பப்பிங் மெயின் பழுது பார்த்தல்
மதிப்பீடு தொகை :ரூ.9,80,000/-

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | M/s.Vino Constructions Contractor Bhavani Sagar | ரூ.980000/- | மதிப்பீடு தொகையினை விட 0.11 % குறைவு | ரூ.863747/- |
| 2 | Thiru.S.R.Moorthy Contractor Sathyamangalam | | மதிப்பீடு தொகையினை விட 1.57 % அதிகம் | ரூ.878241/- |

3) வேலையின் பெயர்: சத்தியமங்கலம் நகராட்சி பொறியியல் பிரிவில் ஓட்டுநர் பணியிடத்திற்கு வெளிஆட்கள் மூலம் ஆட்கள் வழங்குதல் (ஒரு வருடத்திற்கு)
மதிப்பீடு தொகை :ரூ.5,16,000/-

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | M/s.Vino Constructions<br>Contractor<br>Bhavani Sagar | ரூ.516000/- | --- | ரூ.417456/- |
| 2 | Thiru.S.R.Moorthy<br>Contractor<br>Sathyamangalam | | --- | ரூ.418080- |

மேற்கண்ட மூன்று பணிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.Vino Constructions, Contractor Bhavani Sagar நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்
2)குறைவான ஒப்புந்தப்புள்ளிகள் வழங்கிய M/s.Vino Constructions Contractor Bhavani Sagar நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கலாம்.

(கட்டு எண்.548,579/2022/இ1)

**தீர்மானம் எண் : 167 அங்கீகரிக்கப்பட்டது நாள் 30.08.2022**

**நாள் :26.08.2022**

**நகர்மன்ற தலைவர்,**
**சத்தியமங்கலம் நகராட்சி.**